Gnanalayam - The Wisdom Temple
(a unit of Light Bridge Foundation)

No: 27, Jeeva Street, Muthirayarpalayam, Pondicherry 605009, INDIA

**ஓம் ஈஸ்வராய நமஹ!**

நம் குரு அன்னை சித்தியடைந்த பிறகு, குரு அன்னையின் இளைய மைந்தன் திரு. பாலாஜி ராஜு அவர்கள் ஒரு முக்கிய அறிவிப்பினை 02/10/2020 அன்று வெளியிட்டிருந்தார். அதனை கீழே இணைத்துள்ளோம்.

அன்புசார் மானுடர்களே, ஞானாலய குரு அன்னையின் குழந்தைகளே!

இப்பிறவியில் அன்னையின் மைந்தனாய் யாம் தோன்றி கருவினில் உதித்த நாள் முதல் அவருடைய அன்பிலும் அரவணைப்பிலும் எனக்குத் தாயாய், உயிராய், குருவாய் பின்னர் இன்று ஈசனுக்கு துணையாய் ஆதிசக்தியாய் விளங்கும் குரு அன்னை யார் என்பதை அனைவரும் அறியவேண்டும் என்ற நோக்கத்தில் இப்பதிவினை வெளியிடுகின்றேன்.

**அவர்கள் நீங்கள் அறிந்த ஒரு குரு மட்டும் அல்ல. உயர் ஆற்றல்களால் ஈசனுக்கு நிகராக தொழப்படும் ஒரு மாபெரும் பரமாத்மா.**

அவருக்கு நிகர் இப்பூவுலகில் எவரும் இல்லை. விண்ணுலகில் ஈசன் ஒருவரே உள்ளார். ஈசனே குருவின் வடிவில் யுகயுகமாய் பிறந்து மானுடர்களை உய்வித்து விடவேண்டும் என்பதற்காக தன் ஆன்ம விடுதலையை பல சதுர்யுகங்களாய் நிறைவேற்றாமல் ஒவ்வொரு யுகத்திலும் கிருஷ்ணராய், ராமராய் பிறந்து, பின்னர் இயேசுநாதர், நபிகள், சாயிநாதர் போன்ற பல பிறவிகளை மேற்கொண்டு, இக்கலியுகத்தில் பரி மேல், பரி மேல் வலம் வரும் பரிமளாவாக, கல்கியின் அவதாரமாக தோன்றினார். இந்த தாத்பரியங்கள் இன்னும் பல நூறுவருடங்கள் கழித்தே அனைவருக்கும் விளங்கும்.

இப்பணியினை செய்து முடிப்பதற்காக பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே என்னையும், ஞானாலய வட்டமலர்களான ஜெயந்தி ரவிச்சந்திரன் மற்றும் அனைத்து மலர்களையும் குரு அன்னையே தேர்வு செய்தார். தன் பணியினை செய்வதற்காக மானுடர்களை பல நூறு வருடங்களுக்கு முன்பே

தயார் செய்த ஒரு மாபெரும் விஞ்ஞானி அவர். அவர் செய்திடாத காரியங்கள் இல்லை, அவர் புரிந்திடாத Genetic Engineering இல்லை.

தான் யார் என்ற உண்மை தெரிந்தால் ஈசனிடம் உடனே சென்று விடுவார் என்பதற்காக தன் கண்களை தானே மூடிக்கொண்ட காந்தாரி அவர்.

அவரின் ஒரே ஒரு ஆன்மத்துகளை ஜெயந்தி ரவிசந்திரன் என்ற அவரின் முதல் சீடருக்கு கொடுத்தார். அந்த ஒரு துகளின் வெளிப்பாடே அனைத்து ஞானாலயத்தின் வெளியீடுகளும் ஆகும். இதை பலமுறைகள் அகத்திய பெருமானாரும் மற்றும் பல சப்தரிஷிகளும் உள் வட்டத்தில் உள்ள அனைத்து மலர்களுக்கும் தெரிவித்துள்ளனர்.

இப்பொழுது அக்குருவே ஈசனாக மாறி நம்மை வழி நடத்துவதால் அனைத்து செய்திகளையும் குரு அன்னை நம்முள் எவருக்கும் அளிக்க விரும்பப்படுவார் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் அனைத்து ஆன்மாக்களோடும் தொடர்பு வைத்துக் கொள்வார். எவர் ஒருவர் குருவை பரிபூரணமாக மனதில் வைத்துக்கொண்டு, அவரின் அன்பினையும், ஆசியினையும் அவரின் உயர்ந்த நோக்கத்தினையும் உணர்கின்றாரோ, அவர்களுக்கு குரு அன்னை என்றும், எப்பொழுதும் விண்ணுலகில் இருந்து அருள் புரிவார். உங்களுக்குத் தேவையான அனைத்து வழிநடத்துதல்களையும் நேரடியாக குரு அன்னையே அளிப்பார். அதுவே சத்தியம்.

அப்பொழுது எனது பணி என்ன? எனது அன்னையாம் ஈசனின் வழி நடத்துதலின்படி தீட்சையையும், ஆன்ம விடுதலையையும் அன்னையின் அருளினால் யாம் ஒரு கருவியாக இருந்து தொடர்ந்து மானுடம் உய்வதற்கு துணை புரிவோம். இதை குறித்து மேலும் ஒன்பதாம் வட்டமலர்கள் இம்மாத இறுதியில் மலர்ந்த பின் யாம் தெளிவுற உரைப்போம்.

அனைத்து செய்திகளையும் Telegram மற்றும் WhatsApp மற்றும் நம் இணையதளத்தில் மிகத் தெளிவாக எவ்வாறு ஞானாலய அன்னையின் வழி நடத்துதலின் படி அனைத்தும் நடத்தப்படும் என்பதை ஒன்பதாம் வட்டமலர்கள் மலர்ந்த பின் யாம் தெரிவிப்போம்.

அன்னையின் அருள் பணியை என்றும் நான் தொடர்வேன். ஈசனின் வலது கரத்தில் இருக்கும் அன்னைக்கு மைந்தனாய் யாம் எம்பணியினை என்றும் தொடர்வோம். எப்பொழுதும் உங்களில் ஒருவனாய் செயல்படுவோம். என்னை எப்பொழுதும் அலைப்பேசி, மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டு உங்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும், எச்செய்தி வேண்டுமானாலும், என்னிடம் தெரிவிக்கலாம், கூறலாம்.

அன்னையின் அருளாசி பெற்ற பல நபர்கள் வெளிநாடுகளாம் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் இருக்கின்றீர்கள். உங்களுக்கு பல நற்செய்திகளை கூறுமாறு அன்னை அவர்கள் கூறியுள்ளார்கள். அனைத்தினையும் அடுத்த மாதம் இந்த ஒன்பதாம் வட்ட மலர்கள் நிறைவடைந்த பின் பல நற்செய்திகளோடு மீண்டும் உங்களை சந்தித்து பேசுகின்றேன்.

அன்னையின் மகிமையை உணர்வோம். தொடர்ந்து செயல் புரிவோம். அனைவருக்கும் நன்றி. வணக்கம்.

*******